## மன்னர் சரபோஜி அரசுக் கல்லூரி (தன்னாட்சி), தஞ்சாவூர் - 613 005

---

தே.நெ.அ.சுற்.எண்: 74/2025 - 2026 நாள்: 10.06.2026

**சுற்றறிக்கை**

**பொருள்:** ஏப்ரல் 2026 பருவத்தேர்வு - விடைத்தாள் மறுமதிப்பீடு மற்றும் உடனடித் தேர்வு - தொடர்பாக.

ஃஃஃ ஃஃ

நமது கல்லூரியில் நடைபெற்ற ஏப்ரல் 2026 பருவத் தேர்வுகள் தொடர்பாக மாணவர்களுக்கு கீழ்க்கண்டத் தகவல்கள் அறிவிக்கலாகின்றன.

முதுநிலை மற்றும் இளநிலைப் பட்ட வகுப்பு மாணவர்கள் தாங்கள் எழுதிய விடைத்தாள்களை நகல் **(Photocopy)** பெற விரும்பினால் **தாள் ஒன்றுக்கு ரூ.** 400/- வீதமும் மறு மதிப்பீடு **(Revaluation)** செய்து கொள்ள விரும்பினால் **UG தாள் ஒன்றுக்கு ரூ.** 500/- வீதமும் மற்றும் **PG தாள் ஒன்றுக்கு ரூ.** 600/- வீதமும் **(ஏதேனும் இரண்டு தாள்களுக்கு மட்டும்)** 13.06.2026 மாலை 5.00 மணிக்குள் தேர்வு நெறியாளர் அலுவலகத்தில் செலுத்தி பதிவு செய்து கொள்ளுமாறு அறிவிக்கலாகிறது.

**ஒன்று அல்லது இரண்டு தாள்களில் மட்டும் தேர்ச்சியுறாத, முதுநிலை இரண்டாமாண்டு மற்றும் இளநிலை மூன்றாமாண்டு மாணவர்கள்**, அவர்தம் பட்டப்படிப்பினை நிறைவு செய்வதற்கு ஏதுவாக அவர்கள் உடனடித் தேர்வு (Instant Examination) எழுதிட, எதிர்வரும் 17.06.2026 -க்குள் தாள் ஒன்றுக்கு UG: 750 ரூபாய் மற்றும் PG: 1000 ரூபாயை தேர்வு நெறியாளர் அலுவலகத்தில் செலுத்தி அதற்கான விண்ணப்பத்தினைப் பூர்த்தி செய்து தருமாறு அறிவிக்கலாகிறது. இத்தேர்வுக்குரிய கால அட்டவணை பின்னர் தேர்வு நெறியாளர் அலுவலக அறிவிப்புப் பலகையில் வெளியிடப்படும்.

இ.பா.சு. 10/06/26

**தேர்வு நெறியாளர்**

தேர்வு நெறியாளர்
மன்னர் சரபோஜி அரசு கல்லூரி (தன்னாட்சி)
தஞ்சாவூர்-613 005.

மு. 10.6.26

**முதல்வர்**

முதல்வர்,
மன்னர் சரபோஜி அரசுக் கல்லூரி,
(தன்னாட்சி),
தஞ்சாவூர் - 613 005.